சுருக்கம்

கல்லூரிக் கல்வி – சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி – "சேலம் மாவட்டம், காவேரி கல்வி அறக்கட்டளை" சார்பில், சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம், எம்.காளிப்பட்டி கிராமம் என்னுமிடத்தில் "தி காவிரி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி" என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2017–18–ஆம் கல்வியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதியளித்து – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (இ1) துறை

அரசாணை (நிலை) எண்.255

நாள்:31.8.2017.
ஹேவிளம்பி, ஆவணி 15,
திருவள்ளுவராண்டு 2048
படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.356, உயர்கல்வித் (இ1) துறை, நாள்: 29.9.2009.
2. அரசாணை (நிலை) எண்.4, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.7.1.2011.
3. அரசு கடிதம் எண்.17861/இ1/2011–1, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.16.9.2011.
4. அரசாணை (நிலை) எண்.40, உயர்கல்வித் (இ1) துறை, நாள். 28.02.2014.
5. தருமபுரி, மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை, ந.க. எண்.1453/அ1/2017, நாள்.12.5.2017 .2017.
6. சேலம், மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வறிக்கை, ந.க.எண்.12030/2017/எச் 1/, நாள்.16.6.2017.
7. அரசாணை (நிலை) எண்கள்.107, 108 மற்றும் 109, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.14.5.2015.
8. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.11007/ஆர் 4/2017, நாள்.14.7.2017
9. அரசு கடித எண்.12356/இ1/2017–1, நாள் 29.07.2017.
10. சென்னை உயர்நீதிமன்ற அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞரின்கடித நாள்.29.8.2017.

****  ***  ****

ஆணை :–

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம், எம்.காளிப்பட்டி கிராமம் என்னுமிடத்தில் "தி காவிரி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி" என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2017–18–ஆம் கல்வியாண்டில் தொடங்குவதற்கு, "சேலம் மாவட்டம், காவேரி கல்வி அறக்கட்டளை" சார்பில் விண்ணப்பம் பெறப்பட்டு, தருமபுரி, மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் மற்றும் சேலம், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரை பெறப்பட்டது எனவும், இக்கல்வி முகமை பின்வருவனவற்றை நிறைவு செய்துள்ளதாகவும், மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்:–

1) கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்வி முகமையின் பெயரில் கூட்டாக ரூ.20,00,000/– (ரூபாய் இருபது லட்சம்) வைப்புத்தொகை தமிழ்நாடு மின்விசை போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்தின் இரசீது எண். RAA326547, நாள்.25.04.2017–இல் முதலீடு செய்யப்பட்டுள்ளது.